## ஒரு பார்வை - பகுதி 1

**வேதம் கொடுக்கப்பட்ட யூதர்கள் அல்லாஹ்வின் அற்புதங்களை நிராகரித்தார்கள்; வாக்குறுதிகளை மீறினார்கள்; நபிமார்களை நியாயமின்றி கொலை செய்தார்கள்; மர்யம் (அலை) அவர்கள் மீது அபாண்டமான அவதூறுகளை கூறினார்கள். ஈஸா (அலை) அவர்களை சிலுவையில் அறையவும் இல்லை. கொலை செய்யவும் இல்லை. அல்லாஹ் ஈஸா (அலை) அவர்களை தன்அளவில் உயர்த்திக் கொண்டான். ஆண்டவர்கள் 'மூவர்' என்று கூறாதீர்கள். வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ் ஒருவன்தான். அல்லாஹ்வையும் அவன் தூதர்களையும் விசுவாசியுங்கள்.**

## தராவிஹ் - 5: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 4, அன்னிஸா; வசனம்: 148 - 176; பிரிவு: 21 - 24

1. **அக்கிரமத்திற்கு உள்ளானவர்களை தவிர, மற்ற எவரும் யாரைப் பற்றியும் பகிரங்கமாகக் குற்றம் கூறுவதை அல்லாஹ் விரும்பவில்லை. அல்லாஹ் செவியுறுவோனும், நன்கறிவோனுமாய் இருக்கின்றான். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 21)**

2. **நபியே! வேதமுடையவர்கள் தங்கள் மீது ஒரு வேதத்தை வானத்திலிருந்து நீர் இறக்கி வைக்க வேண்டுமென்று உம்மிடம் கேட்கின்றனர். இதைவிடப் பெரியது ஒன்றை மூஸாவிடம் அவர்கள் கேட்டனர். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 22)**

3. **நபி மூஸாவிடம் மக்கள் தங்களுக்கு அல்லாஹ்வை கண்கூடாக காண்பிக்க கேட்டனர். அதனால் அவர்களை இடிமுழக்கம் பிடித்துக் கொண்டது. (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 22)**

4. பின்னர் காளை மாட்டை வணங்கினர். அதையும் நாம் மன்னித்தோம். இன்னும், மூஸாவுக்கு நாம் தெளிவான ஆதாரத்தையும் கொடுத்தோம். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 22)

5. அவர்களை மன்னித்து வாக்குறுதி வாங்க, தூர்மலையை உயர்த்தி, வாயிலின் வழியாக அல்லாஹ்வை வணங்கி செல்ல அனுமதி அளித்தோம். சனிக்கிழமைகளில் மீன் வேட்டையாட தடை செய்தோம். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 22)

6. ஆனால் அவர்கள் வாக்குறுதிகளை மீறினார்கள். அல்லாஹ்வின் வசனங்களை மறுத்தார்கள். நபிமார்களை நியாயமின்றி கொலை செய்தார்கள். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 22)

7. மர்யம் (அலை) அவர்கள் மீது அபாண்டமான அவதூறுகளை கூறினார்கள். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 22)

8. அவர்கள் மர்யம் (அலை) அவர்களின் மகன் ஈஸா (அலை) அவர்களை சிலுவையில் அறைந்து கொலை செய்தோம் என்று கூறினர். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 22)

9. ஆனால் ஈஸா (அலை) அவர்களை சிலுவையில் அறையவும் இல்லை. கொலை செய்யவும் இல்லை. அல்லாஹ் ஈஸா (அலை) அவர்களை தன்அளவில் உயர்த்திக் கொண்டான். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 22)

10. நிச்சயமாக மர்யம் (அலை) அவர்களின் மகன் ஈஸா (அலை) ஒரு தூதர் தான், கடவுளின் குமாரர் அல்ல. அல்லாஹ்வின் ‘குன்’ என்ற வாக்கால் ஈஸா (அலை) அவர்கள் மர்யம் (அலை) வயிற்றில் பிறந்தார்கள். அல்லாஹ்வையும், அவன் தூதர்களையும் விசுவாசியுங்கள். ஆண்டவர்கள் ‘மூவர்’ என்று

கூறாதீர்கள். அதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 23)

11. ஏனெனில் வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ் ஒருவன் தான். அவனுக்கு எவரும் சந்ததியாக இருப்பதிலிருந்து அவன் தூய்மையானவன். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 23)

12. அல்லாஹ் நமக்கு ஒளி பொருந்திய 'குர்ஆன்' என்னும் வேதத்தை கொடுத்து நல்வழி காட்டியுள்ளான். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 24)

## ஒரு பார்வை - பகுதி 2

**விசுவாசிகள் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றவும், நன்மையிலும், பயபக்தியிலும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளவும், பாவங்களைத் தவிர்க்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள். எந்தெந்த உணவுகள் தடைசெய்யப்பட்டுள்ளன, யாரை திருமணம் செய்துகொள்ளலாம் என்பதற்கான விதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், தொழுகைக்கு முன் எவ்வாறு சுத்தம் செய்வது (ஒளூ மற்றும் தயம்மும்) என்பதற்கான வழிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன.**

## தராவிஹ் - 5: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 5, அல்மாயிதா; வசனம்: 1 - 26; பிரிவு: 1 - 4

1. நீங்கள் செய்து கொண்ட உடன்படிக்கைகளை முழுமையாக நிறைவேற்றுங்கள். இன்னும் நன்மையிலும், பயபக்தியிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள். பாவத்திலும், பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டாம். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 1)

2. தடை செய்யப்பட்ட உணவுகள் விளக்கப்பட்டுள்ளது. அவையாவன: செத்த பிராணிகள், இரத்தம், பன்றி இறைச்சி, அல்லாஹ்வின் பெயர் சொல்லாமல் அறுக்கப்பட்டவை. (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 1)

3. எவரேனும் பாவம் செய்யும் எண்ணமின்றி, பசியினால் நிர்ப்பந்திக்கப்பட்டு, விலக்கப்பட்ட உணவுகளை உண்டால், அது குற்றமல்ல. (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 1)

4. விசுவாசம் கொண்ட கற்புடைய பெண்களையும், வேதம் கொடுக்கப்பட்ட கற்புடைய பெண்களையும், அவர்களுக்கு

கொடுக்க வேண்டிய மஹர்களையும் கொடுத்து திருமணம் செய்து கொள்ளலாம். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 1)

5. ஒளுவின் சட்டங்கள் விளக்கப்பட்டுள்ளது. தொழுகைக்கு முன்பு, முகங்களையும், முழங்கைகள் வரையில் கைகளையும், கணுக்கால்கள் வரையில் கால்களையும் கழுவிக் கொள்ள வேண்டும். நீரைத் தொட்டு தலையை தடவி 'மஸஹு' செய்து கொள்ள வேண்டும். குளிப்பு கடமையாக இருந்தால், குளித்துக் கொள்ள வேண்டும். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 2)

6. தண்ணீர் கிடைக்கவில்லையெனில், 'தயம்மும்' செய்து கொள்ளலாம். சுத்தமான மண்ணைக் கையினால் தடவிக் கொண்டு அவைகளால் உங்கள் முகங்களையும், கைகளையும் தடவிக் கொள்ளுங்கள். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 2)

7. நிராகரிப்போர்கள், தங்களுக்கு யாரும் நல்வழி காட்டவில்லை என சாக்குபோக்கு சொல்லாமல் இருப்பதற்காக, அல்லாஹ் குர்ஆனை, முகம்மது நபி (ஸல்) மூலம் இறக்கி நல்வழி காட்டினான். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 3)

## **ஒரு பார்வை - பகுதி 3**

**ஆதம் (அலை) அவர்களின் இரண்டு மகன்கள் பற்றிய தகவல்கள் கூறப்பட்டுள்ளது. ஒரு மகன் மற்றொருவரை பொறாமையினால் கொன்றுவிட்டார். இதன்மூலம், ஒருவரைக் கொல்வது முழு மனிதகுலத்தையும் கொல்வதற்கு சமம் என்றும், ஒரு உயிரை வாழவைப்பது மனிதகுலத்தை வாழவைப்பதற்கு சமம் என்றும் அல்லாஹ் கூறுகிறான். ஒவ்வொரு புனித நூல்களும், அதாவது தௌராத், இன்ஜீல் மற்றும் குர்ஆன் ஆகியவை அவற்றின் காலத்திற்கு வழிகாட்டியாக உள்ளது.**

## **தராவிஹ் - 5: (ரக்அத் 9 முதல் 12)**

### **ஸூரா - 5, அல்மாயிதா; வசனம்: 27 - 56; பிரிவு: 5 - 8**

1. **ஆதம் (அலை) அவர்களின் இரண்டு மகன்கள் பற்றிய தகவல்கள்: ஒரு குமாரர் மற்றொருவரை பொறாமையினால் கொன்று விட்டார். காரணம், தனது சகோதரரின் குர்பானி அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்பட்டு, தனது குர்பானி அங்கீகரிக்கப்படாததால் அவ்வாறு செய்துவிட்டார். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 5)**

2. **தனது சகோதரரின் இறந்த உடலை சுமந்து கொண்டு, என்ன செய்வது என தெரியாமல் உலாவினார். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 5)**

3. **பின்பு அல்லாஹ் ஒரு காகத்தை அனுப்பி, அதை பூமியை தோண்டச் செய்து, எவ்வாறு அடக்கம் செய்வது என்று காண்பித்துக் கொடுத்தான். இதைப் பார்த்த அவர் “அந்தோ! நான் இந்த காகத்தைப் போல் கூட இல்லாமல் இயலாதவனாகி விட்டேனே! அப்படியிருந்திருந்தால் என் சகோதரனுடைய பிரேதத்தை நான் அடக்கம் செய்திருப்பேனே!” என்று கூறி, மிக வருந்தினார். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 5)**

4. இந்த சம்பவத்தின் மூலம் அல்லாஹ் கூறுவது: “எவனொருவன் ஒரு ஆத்மாவை அநியாயமாக கொலை செய்தால், அவன் மனிதர்கள் யாவரையும் கொலை செய்தவன் போலாவான்”. (இஸ்லாமிய சட்டப்படி, ஒருவன் ஒரு கொலை செய்தால். அது அந்த சமுதாயத்தையே கொலைசெய்த குற்றம் ஆகும்). (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 5)

5. அதேபோல் எவன் ஒரு ஆத்மாவை வாழ வைக்கின்றானோ, அவன் மனிதர்கள் யாவரையும் வாழ வைத்தவன் போலாவான். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 5)

6. மூஸா (அலை) அவர்களுக்கு தவ்ராத் வேதம் கொடுக்கப்பட்டது. அதில் நேர்வழியும், பிரகாசமும் இருக்கிறது. (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 7)

7. ஈஸா (அலை) அவர்கள், தமக்கு முன் இருந்த தவ்ராத்தை உண்மையாக்கி வைத்தார். அல்லாஹ், அவருக்கு ‘இன்ஜீல்’ வேதத்தை கொடுத்தான். அதிலும் நேர்வழியும், பிரகாசமும் இருக்கிறது. (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 7)

8. அல்குர்ஆன், முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அது முந்தைய வேதங்களை உண்மையாக்கி வைத்தது. அதுவே நமது வாழ்க்கை முறையாகவும், வாழ்க்கைச் சட்டமாகவும் உள்ளது. (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 7)

## ஒரு பார்வை - பகுதி 4

தொழுகைக்கு அழைப்பு விடுக்கப்படும்போது, சில நிராகரிப்போர் அவர்களது அறிவின்மையால் கேலி செய்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து பாவச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். அவர்களுடைய தலைவர்கள் அவர்களைத் தடுக்கத் தவறிவிட்டார்கள். நபிக்கு அருளப்பட்ட வேதம் அவர்களின் நிராகரிப்பை அதிகரிக்கவே செய்கின்றன.

## தராவிஹ் - 5: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 5, அல்மாயிதா; வசனம்: 57 - 86; பிரிவு: 9 - 11

1. நீங்கள் தொழுகைக்கு அழைத்தால், அதனை இதற்கு முன்பு வேதம் கொடுக்கப்பட்டவர்கள் பரிகாசமாகவும், விளையாட்டாகவும் எடுத்துக் கொள்கிறார்கள். இதற்கு காரணம் அவர்கள் விளங்கிக் கொள்ளாத மக்களாக இருப்பதேயாகும். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 9)

2. "வேதம் உடையவர்களே! அல்லாஹ்வின் மீதும், எங்கள் மீது இறக்கப்பட்ட வேதத்தின் மீதும், எங்களுக்கு முன்னர் இறக்கப்பட்டவை மீதும் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்பதைத் தவிர, வேறு எதற்காகவும் நீங்கள் எங்களைப் பழிக்கவில்லை. நிச்சயமாக, உங்களில் பெரும்பாலோர் பாவிகளாக இருக்கின்றீர்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக! (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 9)

3. நிராகரிப்போர், பாவங்கள் புரிவதில் ஒருவருக்கொருவர் மிஞ்சி வருகிறார்கள். தடை செய்யப்பட்டவற்றை உண்ணுகிறார்கள். அவர்கள் குற்றங்களையே புரிகிறார்கள். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 9)

4. அவர்கள் பாவமான வார்த்தைகளைக் கூறுவதிலிருந்தும், விலக்கபட்ட பொருள்களை உண்பதிலிருந்தும், அவர்களுடைய குருமார்கள் அவர்களைத் தடுத்திருக்க வேண்டாமா? அவர்கள் செய்வதெல்லாம் தீமையே! (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 9)

5. நபியே! உமக்கு அருளப்பட்ட இவ்வேதம், அவர்களில் பெரும்பான்மையினருக்கு பொறாமையையும், நிராகரிப்பையுமே அதிகப்படுத்தி விடுகின்றது. அவர்கள் விசுவாசிகளுக்கிடையே போர் நெருப்பை மூட்டும் போதெல்லாம் அல்லாஹ், அதனை அணைத்து விடுகின்றான். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 9)

6. நபியே! உமது இறைவனிடமிருந்து உமக்கு அருளப்பட்டதை மக்களுக்கு அறிவித்து விடுங்கள். அல்லாஹ், மனிதர்களின் தீங்குகளிலிருந்து உம்மை காப்பாற்றுவான். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 10)

7. நாம் இஸ்ராயீலின் சந்ததிகளிடம் நம்முடைய தூதர்களைப் பின்பற்றும்படி உறுதிமொழி வாங்கி, அவர்களுக்கு பல தூதர்களை அனுப்பி வைத்தோம். ஆனால் அவர்களுடைய மனம் விரும்பாத ஒன்றை நமது தூதர் அவர்களிடம் கொண்டு வந்தபோதெல்லாம், அத்தூதர்களில் சிலரை பொய்யரென்றும் மற்றும் சிலரை கொலை செய்து கொண்டும் இருந்தார்கள். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 10)

8. "மர்யமுடைய மகனாகிய ஈஸா (அலை) தான் அல்லாஹ்" என்று கூறுகிறவர்கள் உண்மையிலேயே நிராகரிப்பவர்கள். நபி ஈஸா (அலை) அவர்கள், அல்லாஹ் ஒருவன் என்றும், அவனை மட்டுமே வணங்க வேண்டும் எனவும் கூறினார். அவர் ஒருபோதும் அல்லாஹ் பிதா, சுதன், பரிசுத்த ஆவி ஆகிய இம்மூவரில் ஒருவன் என கூறவில்லை. அவர்களுக்கு அல்லாஹ் சுவனபதியை நிச்சயமாக ஹராமாக்கிவிட்டான். மேலும் அவர்கள் ஒதுங்குமிடம் நரகமேயாகும். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 10)

9. மர்யம் (அலை) மகன் ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ் அனுப்பி வைத்த ஒரு நபி மட்டும் தான். மர்யம் (அலை) அவர்கள் மிக்க உண்மையான ஒரு சத்தியவதியாகத்தான் இருந்தார். இவ்விருவரும் மற்ற மனிதர்களைப் போல் உணவு உண்டனர். அவர்களுக்கு நம்முடைய அத்தாட்சிகளை கொண்டு எவ்வாறு தெளிவாக்கினோம் என்பதை (நபியே!) நீங்கள் கவனிப்பீராக! அவர்கள் எவ்வாறு திசை திருப்பப்படுகிறார்கள் என்பதையும் கவனிப்பீராக! (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 10)

## ஒரு பார்வை - பகுதி 5

**அல்லாஹ் நமக்கு ஆகுமாக்கி வைத்திருக்கும், பரிசுத்தமானவைகளை விசுவாசிகள் விலக்கப்பட்டவையாக ஆக்கிக் கொள்ள வேண்டாம். அவர்களின் சத்தியங்களை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் நினைவூட்டப்படுகிறார்கள். மதுவும், சூதாட்டமும், சிலை ஆராதனையும், அம்பெறிந்து குறி கேட்பதும் ஷைத்தானுடைய வேலைகளாகும். அல்லாஹ் மறுமைநாள் பற்றிக் கூறும்போது, ஈஸா (அலை) அவர்கள் தன்னை கடவுள் என்று ஒருபோதும் கூறவில்லை என்றும், அல்லாஹ் ஒருவனையே அனைவரும் வணங்கவேண்டும் என்றும் மக்களிடம் கூறியதாக உறுதிசெய்வார்கள்.**

## தராவிஹ் - 5: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 5, அல்மாயிதா; வசனம்: 87 - 120; பிரிவு: 12 - 16

1. **அல்லாஹ் உங்களுக்கு அனுமதித்த பரிசுத்தமானவைகளை நீங்கள் விலக்கப்பட்டவையாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 12)**

2. **அல்லாஹ் வீணான சத்தியங்களைக் கொண்டு நம்மை குற்றம் பிடிப்பதில்லை. ஆனால் உறுதிப்படுத்த நாம் செய்யும் சத்தியத்தில் தவறு இருந்தால் நம்மை பிடிப்பான். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 12)**

3. **அத்தவறுக்கு பரிகாரம், பத்து ஏழைகளுக்கு உணவு அளிக்க வேண்டும். அல்லது ஒரு அடிமையை விடுதலை செய்ய வேண்டும். அல்லது மூன்று நாட்கள் நோன்பு இருக்க வேண்டும். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 12)**

4. **மதுவும், சூதாட்டமும், சிலை ஆராதனையும், அம்பெறிந்து குறி கேட்பதும் ஷைத்தானுடைய வேலைகளாகும். இந்த அருவருக்கத்தக்க வேலைகளிலிருந்து நாம் விலகிக்**

கொண்டால், அல்லாஹ் உங்களுக்கு வெற்றியை அளிப்பான். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 12)

5. நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம், மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும், வெறுப்பையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடத்தான். எனவே, அவற்றை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ள மாட்டீர்களா? (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 12)

6. மறுமைநாளில் அல்லாஹ், ஈஸா (அலை) அவர்களுக்கும், அவரது தாய் மர்யம் (அலை) அவர்களுக்கும் புரிந்த அருட்கொடைகளைப் பற்றி அவர்களுக்கு நினைவுகூறுவான். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 15)

7. அல்லாஹ் ஈஸா (அலை) அவர்களுக்கு ஜிப்ரீல் (அலை) என்ற பரிசுத்த ஆத்மாவைக் கொண்டு உதவினான். அவர்கள் தொட்டிலில் இருந்த போது பேச வைத்தான். வாலிபரானதும் தவ்ராத், இன்ஜீல் வேதங்களை கற்பித்து, இன்ஜீல் வேதம் மூலம் மக்களிடம் எடுத்துரைக்கச் செய்தான். களிமண்ணால் செய்த பறவைக்கு உயிர் கொடுத்து பறக்கச் செய்யும் ஆற்றலை வழங்கினான். குருடர்களையும், வெண் குஷ்டரோகிகளையும் குணப்படுத்தும் ஆற்றலை அவருக்கு வழங்கினான். மரணித்தோருக்கு உயிர் கொடுத்து நடமாட வைக்கும் ஆற்றலையும் அவருக்கு வழங்கினான். மற்றும் இஸ்ராயீலின் சந்ததிகளின் தீங்குகளிலிருந்து, ஈஸா (அலை) அவர்களை காப்பாற்றினான். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 15)

8. ஈஸா (அலை) அவர்களிடம் அவருடைய சீடர்கள், வானத்திலிருந்து அவர்களுக்காக ஒரு உணவுத்தட்டை வரவழைக்க முடியுமா? எனக் கேட்டனர். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 15)

9. அல்லாஹ் அவ்வாறே செய்து, அதன்பின் யாரொருவர் அல்லாஹ்வை நம்பவில்லையோ, அவர்களுக்கு மிக்க தண்டனை உண்டு எனக் கூறினான். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 15)

10. இவ்வாறு அனைத்தையும் ஞாபகப்படுத்தி ஈஸா (அலை) அவர்களிடம் அல்லாஹ், 'ஈஸாவே! நீ மக்களை என்னைத் தவிர உன்னையும், உனது தாயாரையும் வணங்கக் கேட்டுக் கொண்டாயா?' என வினவினான். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 16)

11. அதற்கு ஈஸா (அலை) அவர்கள், 'நான் அதை ஒருபோதும் செய்யவில்லை. அவ்வாறு செய்திருந்தால், அதை அல்லாஹ் நிச்சயமாக அறிந்திருப்பான்' என கூறினார்கள். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 16)

12. மேலும் ஈஸா (அலை) அவர்கள், 'அல்லாஹ் எனக்கு இன்ஜீல் வேதம் மூலம் கூறியதை மட்டுமே மக்களுக்கு எடுத்துக் கூறினேன். அல்லாஹ் ஒருவன்தான் எனக்கும் உங்களுக்கும் இறைவன். மேலும், நான் அவர்களுடன் உலகில் இருந்த காலமெல்லாம் அவர்களைக் கண்காணித்தேன். நீ என்னைக் கைப்பற்றிய பின்னர், நீயே அவர்கள் மீது கண்காணிப்பவனாக இருந்தாய்' என்றார்கள். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 16)

13. (இறைவா!) நீ அவர்களை வேதனை செய்தால் உன்னுடைய அடியார்களாகவே நிச்சயமாக அவர்கள் இருக்கின்றனர். அன்றி, நீ அவர்களை மன்னித்து விடுவாயானால், நிச்சயமாக நீ தான் (யாவரையும்) மிகைத்தோனாகவும், ஞானம் மிக்கவனாகவும் இருக்கின்றாய்" என்றும் கூறுவார்கள். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 16)

14. அல்லாஹ் மறுமைநாள் பற்றிக் கூறும்போது, அந்தநாளில் உண்மையானவர்களுக்கு அவர்களின் உண்மைக்கான பலன் அளிக்கப்படும் என்றான். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 16)

15. வானங்களுடையவும், பூமியினுடையவும், அவற்றில் இருப்பவற்றின் ஆட்சியும் அல்லாஹ்வுக்கே சொந்தம். அவனே எல்லாப் பொருட்கள் மீது பேராற்றலுடையோன் ஆவான். (ஸூரா - அல்மாயிதா; பிரிவு: 16).

---------------------------------------------------------------